2002 அக்டோபர் 30]
பண்ருட்டி பங்க் மூலம் மண்ணெண்ணெய் வழங்கக்கூடியதிலே இருக்கிற இடர்பாடுகளை, குறைபாடுகளைப் போக்குகிற வகையிலே இந்த அரசு உரிய அறிவுரைகளை அந்த பங்க்-க்கு வழங்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 73, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*

73—

கோட்டாட்சியர் அலுவலகம்

***1752—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) அரக்கோணம் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

திருமதி கே. பவானி கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழகத்தின் விடிவெள்ளி, இருண்டு கிடந்த பெண்கள் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, நான் இருக்கிறேன் உங்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவதற்கு என்று சொல்லாமல் செயலில் பெண்களுக்குப் பல திட்டங்களை வாரி வழங்கிய எங்கள் அன்னை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் கமல மலர் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் வினாவினைத் தொடுக்கின்றேன். அரக்கோணம் தொகுதி, வட ஆற்காடு மாவட்டத்தின் கடைசியாக உள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,

கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் போக வேண்டும் என்றால் எல்லாமே வேலூர், ராணிப்பேட்டை, தலா 80 கிலோ மீட்டர், 50 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியுள்ளது. வறட்சி நிறைந்த தொகுதியான அரக்கோணத்தில் எந்தவித அலுவலகமும் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு கோட்டாட்சியர் அலுவலகம் செல்லக்கூட வழி இல்லாமல், இன்றும் பலர் இருக்கும் இந்த நிலையில், எங்கள் தொகுதி மக்களுக்கு இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், வரும் நிதியாண்டிலாவது கோட்டாட்சியர் அலுவலகம் அரக்கோணத்தில் அமைத்துத் தருவாரா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 3 கோட்டங்கள் இருக்கின்றன; ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர். ராணிப்பேட்டையின்கீழ் 3 வட்டங்கள் இருக்கின்றன; ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம். வேலூரின்கீழ் வேலூர், குடியாத்தம் வட்டங்கள் இருக்கின்றன. திருப்பத்தூரின்கீழ் காட்பாடி, திருப்பத்தூர், வாணியம்பாடி; ஆக வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 8 வட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது அரக்கோணத்திலே வருவாய்க் கோட்டம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அங்கே கிராம மக்களின் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. மேலும் ஒரு கோட்டத்தை உருவாக்க வேண்டுமென்றால் கிராம மக்கள் தொகை குறைந்தது 7 இலட்சத்திலிருந்து 9 இலட்சமாக இருக்க வேண்டும். எனவே, புதிய கோட்டம் அமைக்கும் திட்டம் தற்சமயம் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

74—

வட்டாட்சியர் அலுவலகம்

***8210—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—